www.padippakam.com




# பதவிக்காக யாழ் தமிழர் செய்த கிளர்ச்சி




40

ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைப் பிடித்த போது முதல் கம்மந்தோராக இருந்த றைக்லொவ் வான் ஹூன்ஸ் (RYCKLOFF VAN GOENS) தனது யாழ்ப்பாண நீதி நிர்வாகப் பிரிவில் உள்ள அரசாங்க உயர் பதவிகளை முழுக்க ஒல்லாந்தருக்கு மட்டுமே வழங்காமல், யாழ்ப்பாண வாசிகளுக்கும் வழங்க உத்தரவிட்டான்.

அதன்படி **அதிகாரம், முதலியார், இறைசுவார்** (வரிவசூலிப்பவர்) **எழுதுவினைஞர்** முதலான அரச உயர் பதவிகள், யாழ்ப்பாண சமூகத்திலிருந்த உயர்குலத்தவர்களுக்கு வழங்கப்பட்டன. அதிகாரத்து 6 இறைசாலும் முதலியார்மாருக்கும்



இறைசுவார்களுக்கும் தலா பத்துப் பணமும் ஒரு பறை அரிசியும், அவர்களுக்குக் கீழிருந்த எழுதுவினைஞர்களுக்கு 8 பணமும் ஒரு பறை அரிசியும் மாதச் சம்பளமாக வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணக் கோட்டைக்கு வெளியே இருக்கும் படைகளுக்கு பொறுப்பாயிருப்பது, வீதிகள், விவசாய நிலங்கள், கடைகள், சந்தைகளை மேற்பார்வை செய்வது, உணவுப் பொருட்களுக்கும் மற்றைய உற்பத்திப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வது, ஊர்கள் தோறும் காலையிலும், மாலையிலும் மதப் பிரசாரங்கள் செய்வது என்பன அதிகாரத்தின் கடமைகளாக இருந்தன.

முதலியார்மாரின் கடமைகளாக தமது பிரதேசத்தில் நடக்கும் அனைத்து நடவடிக்கைகள் பற்றியும் விசாரணை செய்து அதுபற்றி காலத்துக்குக் காலம் கந்தோருக்கு அறிக்கை சமர்ப்பிப்பது தங்களுடைய பிரிவுகளில் எந்தெந்த வேலைகள் நடக்க வேண்டுமெனத் தீர்மானித்து அந்த வேலைகளை செய்விப்பது. அது பற்றி அதிகாரத்துக்கு அறிவிப்பது என்பன இருந்தன. இறைசுவார்களுக்கு, வரிவசூலிப்பதும், வசூலித்த வரியை கோட்டையில் உள்ள அதிகாரிகளிடம் கொண்டுபோய்க் கட்டுவதும் உரிய கடமைகளாக அறிவிக்கப்பட்டிருந்தன.

கி.பி 1658ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ம் திகதி சுதேசிகளுக்கும் அரச உத்தியோகம் வழங்குவது தொடர்பாகவும், அதற்கு அவர்களுக்கு இருக்க வேண்டிய சமூக அந்தஸ்த்து தொடர்பாகவும் இயற்றப்பட்ட சட்டம், யாழ்ப்பாண சமூக அமைப்பில் பார்ப்பனிய மதப் பிரிவினரால் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த கீழ்த்தட்டு மக்கள், கிருஸ்தவ மதத்தில் சேர்ந்து மதக் கல்வியும், உயர் கல்வியும் கற்க ஆரம்பித்ததும், அவர்களும் அரச பதவிகளை வகிக்கத் தகுதி உடையவர்கள் என்று கி.பி 1694ம் ஆண்டு மாற்றப்பட்டது.

அரச உயர் பதவிகளை வகிப்பதென்பது தமக்குக் கிடைத்த பெரும் பேறும், தமது சமூக அந்தஸ்த்துக்கான அடையாளமும் என்று கருதி வந்த யாழ்ப்பாண ஆளும்வர்க்கத்தினருக்கு இந்தச் சட்டத் திருத்தம் அவர்கள் போர்த்துக்கேயர்களிடம் தமது ஆளும் உரிமையை இழந்தபோது ஏற்பட்ட பாதிப்பை விட பல மடங்கு பாதிப்பை உண்டாக்கக்கூடியதாக இருந்தது. இதன் மூலம் காலா காலமாக தாங்கள் கட்டிக் காத்துவந்த இந்து சனாதன சாதி அமைப்பு இதனால் தகர்ந்து போய், தங்களுடைய மேல் நிலை வாழ்வுக்கு பங்கம் வந்து விடும் என்று அவர்கள் பயந்தார்கள்.

இதனால் கி.பி 1694ம் ஆண்டு யூலை மாதம் இச் சட்டத்திருத்தத்தை எதிர்த்து அவர்கள் மிகப்பெரிய கலகம் ஒன்றில் ஈடுபட்டார்கள். இதுவே யாழ்ப்பாண ஆளும் வர்க்கத்தினர் சலுகைகளுக்காக நடத்திய முதல் கிளர்ச்சி எனக் கருதப்படுகிறது.

தமது ஆட்சியின் தொடக்க காலத்தில் கிறிஸ்தவ மதப் பிரச்சாரத்தில் அதிக கவனத்தை செலுத்தாத ஒல்லாந்தர்கள் நாளாக ஆக அதிலும் கவனம் செலுத்த ஆரம்பித்தனர். தொடக்க காலத்தில் வந்த ஒல்லாந்தப் படை வீரர்கள் குடும்பத்துடன் வராதபடியினால் யாழ்ப்பாணத்திலிருந்த போர்த்துக்கேய பெண்களையே மணம் முடித்தனர். ஆயினும் பின்னர், சுதேசிப் பெண்களையும் மணம் முடிக்க அனுமதிக்கப் பட்டனர். அவ்வாறு ஒரு ஒல்லாந்து தேசத்தவரை மணம் முடிக்கும் ஒரு யாழ்ப்பாணப் பெண் தான் புறொட்டஸ்தாந்து கிறிஸ்தவர் என்று, அம் மதத்தைச் சேர்ந்த குருமாரிடம் அத்தாட்சிப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். அத்தோடு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தவறாது கோயிலுக்கு செல்ல வேண்டும் என்றும் கண்டிப்பாக கூறப்பட்டிருந்தது. அவ்வாறு செய்யத் தவறினால் அவர்களது கணவர்மாரின் சம்பளம் பறிமுதல் செய்யப்பட்டது.

ஒல்லாந்தர் காலத்தில் அவர்களது திருத்தியமைக்கப்பட்ட கிறிஸ்தவ மதத்தில் மக்கள் சேருவத மிக அதிகமாக இருந்தது. இவ்வாறு மதம் மாறுபவர்கள் அரச பதவிகளைப் பெறுவதற்காகவே மதம் மாறுகின்றார்கள் என்றும் உண்மையான மதப்பற்றால் அல்ல என்பதையும் உணர்ந்து கொண்ட ஒல்லாந்தர்கள், உண்மையான கிறிஸ்து விசுவாசிகள் யார், போலிகள் யார் என்பதை கண்டறிவதற்காக, போர்த்துக்கேயர் காலத்தில் இந்து மதத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கினார்கள்.

அதனையடுத்து முதன் முதலாக யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் கட்டப்பட்டது. கி.பி 1787-ம் ஆண்டு வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் கோயில் கட்ட உத்தரவு பெறப்பட்டு கி.பி 1791ல் கட்டி முடிக்கப்பட்டு குடமுழுக்கும் செய்யப்பட்டது.

அதன் பின் ஒலிவேராவால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட நல்லூர் கந்தசாமி கோயிலை திருப்பிக் கட்டுவதற்காக, அந்தக் கோயிலின் பிராமணர் பரம்பரையில் வந்த சிலர் கி.பி 1793ல் ஒல்லாந்து கொம்மாந்தோருக்கு ஓர் விண்ணப்பம் ஒன்றைச் செய்தனர். அவர் அதற்கு அனுமதியளித்ததும் ஏற்கனவே யமுனாரிக் கரையில் அந்தக் கோயில் இருந்த இடத்தில் கிறிஸ்தவ ஆலயம் அமைக்கப்பட்டு விட்டபடியால் 'பிராமணவளவு' என்ற தங்களது உரிமைக் காணியில் (தற்போது கோயில் அமைந்துள்ள இடம்) சிறு கோயிலாக அது அமைக்கப்பட்டது. இக்கோயிலுக்குரிய மடம் அம்பலவாணர் கந்தப்பு செட்டி என்பவரின் பெயரில் தோம்பு பதியப்பட்டிருக்கிறது.

> **ஒல்லாந்தர் காலத்தில் அவர்களது திருத்தியமைக்கப்பட்ட கிறிஸ்தவமதத்தில் மக்கள் சேருவது மிக அதிகமாக இருந்தது. இவ்வாறு மதம் மாறுபவர்கள் அரச பதவிகளைப் பெறுவதற்காகவே மதம் மாறுகின்றார்கள் என்றும் உண்மையான மதப் பற்றால் அல்ல என்பதை உணர்ந்து கொண்ட ஒல்லாந்தர்கள் உண்மையான கிறிஸ்து விசுவாசிகள் யார், போலிகள் யார் என்பதை கண்டறிவதற்காக, போர்த்துக்கேயர் காலத்தில் இந்து மதத்திற்கு விதிக்கப் பட்டிருந்த தடையை நீக்கினார்கள்.**

போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டை மீண்டும் புதுப்பித்துத் திருத்திக் கட்டப்பட்டது. கோட்டைக்குள் இருந்த கிறிஸ்தவ ஆலயம், ஆயிரம், மூன்றரைப் பணம் வீதம் வாங்கப்பட்ட இருபாலைச் செங்கற்களால் கி.பி 1706ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

கி.பி. 1658-ம் ஆண்டு தொடக்கம் கி.பி 1665 வரை யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் கிறிஸ்தவ மதசேவைக்காக பிரயாணம் செய்த பஸ்தேயஸ் என்னும் மதகுரு, குடாநாட்டிலுள்ள இடங்கள், மக்கள் தொகை, மக்களுடைய பழக்க வழக்கங்கள், சாதிகள் அவர்களுடைய ஆதாரங்கள் பற்றிய விரிவான குறிப்புகளை எழுதி வைத்துள்ளார். அதுவே யாழ்ப்பாண சமூக அமைப்புப் பற்றி அறியக்கூடிய முதலாவது பழமையான குறிப்பாகவுள்ளது.

**- நக்கீரன்**